# சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி

## OS. No. 248/2019

## 06.11.2025

## P.W.1- ராமன்

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

வாதி பெருமாயி பிரதிவாதிகளின் தகப்பனார் சின்னனின் மைத்துனர் அய்யாத்துரையின் மகள் என்றால் சரிதான். எனது தகப்பனார் பெயர் முனியாண்டி, எனது தாத்தா பெயர் பெருமாள். எனது தாத்தா பெருமாள் என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். பெருமாளின் மூத்த மனைவியின் பெயர் பெருமாயி ஆகும். வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கொடி வழி ஜாபிதாவில் முதல் மனைவி, இரண்டாவது மனைவி என குறிபிட்டு கூறவில்லை என்றால் சரிதான். எனது பிராது மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் முதல் மனைவியின் பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 2ம் மனைவி காளியம்மாள் கணவர் பெயர் பெருமாள் என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. விக்னேஷ் என்பவர் எனது மனைவியின் உடன்பிறந்த சகோதரியின் மகன் என்றால் சரிதான். பழனிச்சாமி, ராமன் ஆகியோர்கள் எனது மனைவியின் உடன்பிறந்த சகோதராகள் என்றால் சரிதான். சின்னனுக்கு 5 பெண் பிள்ளைகள் மற்றும் 1 ஆண் பிள்ளை வாரிசுகள் ஆவார்கள். பெண் பிள்ளைகளின் பெயர்கள் ஞாபகமில்லை. நான் சொல்வது போன்று சின்னன் என்பவருக்கு 5 பெண் பிள்ளைகள் இல்லை, 6 பெண்பிள்ளைகள் என்றால் தெரியாது. சின்னனின் மூத்த மகள் பெயர் பெருமாயி ஆகும். மேற்படி கொடிவழி ஜாபிதாவில் பெருமாயி என்பவர் பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வழக்கில் பெருமாயியை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் பெருமாளின் வாரிசுகள் இல்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பெருமாளின் வாரிசாக இருந்திருந்தால் மேற்படி பெருமாளின் வாரிசுகளை முழுவதும் கூறியிருப்பேன் என்றால் சரியல்ல. எனக்கு 6 வயது இருக்கும்போது எனது தகப்பனார் இறந்துவிட்டார். எனது தாயார் இறந்து சுமார் 30

வருடங்கள் இருக்கும். என்னை எனது பெரியப்பா சின்னன் வளர்த்து வந்தார். நான் தாய், தகப்பன் இல்லாமல் இருந்ததால் சின்னன் என்பவர் என்னை வளர்த்து அவரது மைத்துனர் மகளை திருமணம் செய்து வைத்தார் என்றால் சரிதான். தாவா சொத்தில் முனியாண்டி அனுபவம் செய்ததற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. வழக்கில் 3 இலக்க சொத்துக்களை தாக்கல் செய்துள்ளேன். எனக்கு சொத்து வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக தான் எனது பெயரை கூட்டுபட்டாவில் சேர்த்தேன் என்றால் சரியல்ல. எனது பெயரில் கூட்டு பட்டா கிடைத்தவுடன் எனது மனைவி மற்றும் அவரது தங்கை மகன் விக்னேஷ் பெயர்களில் எழுதி வைத்த தானசெட்டில்மென்ட் ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல. எனது பெயரில் பட்டாவும், எனது மனைவி பெயரில் பத்திரம் ஏற்படுத்தியது தெரிந்தவுடன் 1 முதல் 4 பிரதிவாதிகள் உசிலம்பட்டி, உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.112/2018 என வழக்கு தாக்கல் செய்து, மேற்படி வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். மேற்படி வழக்கு தாக்கல் செய்த பின்பு தான் இந்த வழக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இரண்டு வழக்குகளில் உள்ள தாவா சர்வே எண்கள் ஒன்றுதான் என்றால் தெரியாது. நான் 1வது இலக்க சொத்தில் 9 சென்டிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தலா 4 1/2 சென்டு உரியையுண்டு. 2வது இலக்க சொத்தில் 20 சென்டிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 3வது இலக்க சொத்தில் 6 1/2 சென்டிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 3வது இலக்க சொத்து வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எவ்வளது விஸ்தீரணம் இருந்தது என்றால் ஞாபகமில்லை. தாவா 3வது இலக்க சொத்தை பொறுத்து பிரதிவாதிகள், அவர்களது தகப்பனார் வெவ்வேறு நபர்களுக்கு 25 சென்டு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி தாவா வழக்கு முழுவதிலும் எனக்கு எந்தவித உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. நான் பெருமாளின் வாரிசு இல்லையென்பதால் எனக்கு தாவா சொத்தில் எந்த பங்கும் கிடையாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 குற்றவியல் வழக்கு உண்மைக்கு புறம்பானது என குறைவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 முதல் 9 வரையிலான ஆவணங்கள் சின்னன் என்பவர் என்னை வளர்த்து வந்ததால்

எனக்கு, அவரின் பங்கில் நிலங்கள் கொடுக்க வேண்டி, நான் பட்ட கடனுக்கு விற்பனை செய்யப்பட்ட பத்திரங்கள் என்றால் சரியல்ல. நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.11.06 16:58:34 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.